# திருத்தங்கல் நாடார் கல்லூரி

சேலவாயல், சென்னை – 51

## தமிழ்த்துறை

## செய்தி மடல் (2021 - 2022)

| சிறப்பாசிரியர் | மேலாண்மை ஆசிரியர் |
|---|---|
| திரு M.G.E. செல்லப்பழம்<br>தாளாளர் மற்றும் செயலாளர் | முனைவர் K.C. லலிதாம்பிகை,<br>முதல்வர் (பொ) |

**முதன்மை ஆசிரியர்**

திரு. த. சிவகுமார்

துறைத்தலைவர் & இணைப் பேராசிரியர்

**துணை ஆசிரியர்கள்**

திருமதி. ஜெ. தேவி, இணைப் பேராசிரியர்

முனைவர் ம. மகாலட்சுமி, இணைப் பேராசிரியர்

முனைவர் அ. மலர்விழி, இணைப் பேராசிரியர்

முனைவர் கு. முதற்பாவலர், உதவிப் பேராசிரியர்

முனைவர் லோ. சந்திரசேகர், இணைப் பேராசிரியர்

முனைவர் இரா. கந்தசாமி, உதவிப் பேராசிரியர்

முனைவர் ஜோ. சம்பத்குமார், உதவிப் பேராசிரியர்

திரு. பெ. கார்த்திகேயன், உதவிப் பேராசிரியர்

முனைவர் சு. பிரபாகரன், உதவிப் பேராசிரியர்

திரு. சு. நரேந்திரகுமார், உதவிப் பேராசிரியர்

முனைவர் மா.மார்த்தாண்டபூபதி, உதவிப் பேராசிரியர்

முனைவர் இரா. ராஜா, உதவிப் பேராசிரியர்

திருமதி. மு. முத்துலட்சுமி, உதவிப் பேராசிரியர்

திருமதி வை. வனிதா, உதவிப் பேராசிரியர்

திருமதி. க. கௌரி, உதவிப் பேராசிரியர்

# திருத்தங்கல் நாடார் கல்லூரி

சேலவாயல், சென்னை – 51

## நோக்கம் (Vision)

மாணவர்களுக்கு இலக்கண, இலக்கியப் பயிற்சி அளித்தல், இலக்கணப் பயிற்சியோடு தாய் மொழியில் பிழையின்றி எழுதவும் பேசவும செய்தல், தமிழ் சார்ந்த பல்வேறு தளங்களில் மாணவர்களைத் திறம்பட உருவாக்குவதே நோக்கமாகும்.

## செயல் (Mission)

மாணவர்களுக்குப் பாடம் பயிற்றுவிப்பது மட்டுமல்லாமல் ஆய்வரங்கம், பயிலரங்கம் மூலம் இலக்கியப் படைப்பாற்றலை வளர்த்தல், நவீன காலச் சூழலில் கணினித் தமிழ் ஆற்றலை மேம்படுத்துதல், இதழியல் மற்றும் செய்தி ஊடகங்களில் தங்கள் ஆற்றலை வளர்த்துக்கொள்ளச் செய்தல் இன்னும் பிற செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல விழைகின்றோம்

### பட்டிமன்றம்

திருத்தங்கல் நாடார் கல்லூரி, தமிழ் துறை 05.06.2021 அன்று மாலை உற்ற நேரத்தில் ஓடி வந்து உதவுவது உறவே! நட்பே! எனும் தலைப்பில் இணையவழி பட்டிமன்றம் நடந்தது. நிகழ்ச்சியில் திரு. எம். ஜி.இ. செல்லப்பழம் அவர்கள் தலைமை உரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். முருகேசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பட்டிமன்ற நடுவராக ஸ்ரீ கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் முனைவர் ஆர். வேதநாயகி, பட்டிமன்ற பேச்சாளர் அவர்கள் இருந்தார்.

உறவே என்னும் அணியில் தமிழ்த்துறைப் பேராசிரியர்களான திரு. த. சிவகுமார், தமிழ்த்துறை தலைவர், திரு. சி.சிவராஜ் ஆகியோர் பேசினர். நட்பே எனும் அணியில் தமிழ்த்துறைப் பேராசிரியரகள் முனைவர் லோ. சந்திரசேகர், முனைவர் ஜோ. சம்பத்குமார் ஆகியோர் பேசினர். இணையவழி பட்டிமன்றத்தில் திருத்தங்கள் நாடார் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், நிர்வாக குழு உறுப்பினர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# திருத்தங்கல் நாடார் கல்லூரி

சேலவாயல், சென்னை – 51



**பெருந்தலைவர் காமராஜரின் 119 ஆவது பிறந்தநாள் விழா, கல்வி வளர்ச்சி நாள்**

பெருந்தலைவர் காமராஜரின் 119ஆவது பிறந்தநாள் விழா, கல்வி வளர்ச்சி நாள் 15.07.2021 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்குத் திரு. எம்.ஜி.இ. செல்லப்பழம் செயலாளர் - தாளாளர், திருத்தங்கல் நாடார் கல்லூரி அவர்கள் தலைமை ஏற்றார். வரவேற்புரையை பேரா. த. சிவகுமாரும் நன்றியுரையை திருமதி. வை. வனிதாவும் வழங்கினர். சிறப்பு விருந்தினராக முனைவர் பெ.கி. பிரபாகரன் (தமிழ்த்துறைத் தலைவர் - ஸ்ரீ அகோபில மடம், சமஸ்கிருத கல்லூரி, மதுராந்தகம்) அவர்கள் பங்கேற்று விழாப் பேருரை வழங்கினார்.



## நூல் விமர்சனம்

தமிழ்த்துறை உதவி பேராசிரியர் சுழற்சி: 2 முனைவர் கு முதற்பாவலர் அவர்களின் தொல்காப்பிய செய்யுள் உறுப்புகள் உரையாசிரியர்கள் நோக்கு என்னும் தலைப்பில் அமைந்த அமைந்த ஆய்வு நூல் பற்றிய விமர்சனம் 26/07 /2021 அன்று தினமணி நாளிதழிலும் 10/10 /2021 அன்று தினத்தந்தி நாளிதழிலும் வெளிவந்தன.


தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள் உரையாசிரியர்கள் நோக்கு — கு. முதற்பாவலர்; பக்.464; ரூ.350; முத்தமிழ் நிலையம், 335, மாரியம்மன் கோவில் தெரு, திண்டிவனம் வட்டம் — 604101.


### தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள்

தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் உள்ள செய்யுள் இயலுக்கு இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பாலசுந்தரம் ஆகியோர் எழுதிய உரைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நூல் ஆக்கப்பட்டு இருக்கிறது. தொல்காப்பியத்தின் 34 செய்யுள் உறுப்புகளில் 21 ஐ தெரிவு செய்து, அதன் இலக்கணத்தை ஆராய்ந்து விளக்கமாக சொல்லப்பட்டு இருக்கிறது. தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகளை அறிந்துகொள்ள முயலும் தமிழ் ஆர்வலர்களுக்கு இந்த நூல் பயன் உள்ளதாக இருக்கும்.

(ஆசிரியர்: முனைவர் கு.முதற்பாவலர்; வெளியீடு: முத்தமிழ் நிலையம், 335, மாரியம்மன் கோவில் தெரு, ஏப்பாக்கம், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்–604101; விலை:ரூ.350; செல்போன்: 91765 51453)

## பாரதி நினைவு நூற்றாண்டு விழா

மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டை போற்றும் வகையில் தமிழ்த் துறை சார்பில் 01.10.2021 வெள்ளிக்கிழமை அன்று பாரதி நினைவு நூற்றாண்டு விழா இணைய வழியில் கொண்டாடப்பட்டது. வரவேற்புரையைத் தமிழ்த்துறைத் தலைவர் திரு. த. சிவகுமார், நன்றியுரையை தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் இரா. ராஜா வழங்கினார். சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை தர்மபண்டின் துணைத்தலைவர் திரு. எம். செல்லப்பா விழாவிற்குத் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினரைக் கல்லூரி முதல்வர் (பொ.) கே.சி. லலிதாம்பிகை அவர்கள் அறிமுகப்படுத்தினார். சிறப்பு விருந்தினராகப் புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர். பா. ரவிக்குமார் அவர்கள் பங்கேற்று விழாப் பேருரை வழங்கினார்.



## ஆசிரியர் நாள் விழாவில் பட்டிமன்ற நிகழ்வு

நமது கல்லூரி சார்பாக 17.9.2021 அன்று நிகழ்ந்த ஆசிரியர் நாள் சிறப்பு பட்டிமன்றத்தில் துறை பேராசிரியர்கள் நடுவர்களாகவும் அணி பேச்சாளர்களாகவும் பங்கு பெற்றனர். வாழ்க்கையில் பெரிதும் விட்டுக் கொடுப்பது ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. நடுவராக முனைவர் லோ. சந்திரசேகர் பங்கேற்றார். பெண்களே என்னும் அணியில் திருமதி. ஜெ. தேவி, முனைவர் மகாலட்சுமி ஆகியோரும் ஆண்களே என்னும் அணியில் முனைவர் சு. பிரபாகரனும் பேசினர். திரு. சு. நரேந்திரகுமார் கவிதை வழங்கினார்.



# திருத்தங்கல் நாடார் கல்லூரி

சேலவாயல், சென்னை – 51

## சிறப்புச் சொற்பொழிவு

இளங்கலைத் தமிழ்ப் படிக்கும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் 21.09.2021 அன்று சிறப்புச் சொற்பொழிவு இணைய வழியில் நடைபெற்றது. தமிழக வரலாற்றில் இன்றைய அகழாய்வுகள் என்னும் தலைப்பில் முனைவர் சி. இளங்கோ (தொல்லியல் ஆய்வாளர்) சிறப்புச் சொற்பொழிவை வழங்கினார். நிகழ்வில் வரவேற்புரையை திரு. த. சிவகுமார் (தமிழ்த்துறைத் தலைவர்) அவர்களும் நன்றியுரையை முனைவர் மா.மார்த்தாண்டபூபதி அவர்களும் வழங்கினர்.



## சிறப்புச் சொற்பொழிவு

இளங்கலைத் தமிழ்ப் படிக்கும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் 12.10.2021 அன்று சிறப்புச் சொற்பொழிவு இணைய வழியில் நடைபெற்றது. இலக்கண உலகில் நன்னூல் என்னும் தலைப்பில் முனைவர் க. சவுந்தரவள்ளி (காமராஜர் அரசுக் கல்லூரி, புதுச்சேரி) சிறப்புச் சொற்பொழிவை வழங்கினார். நிகழ்வில் வரவேற்புரையை முனைவர் இரா. கந்தசாமி அவர்களும் நன்றியுரையை முனைவர் அ.மலர்விழி அவர்களும் வழங்கினர்.

# திருத்தங்கல் நாடார் கல்லூரி

சேலவாயல், சென்னை – 51



**மாணவர்களோடு கலந்துரையாடல் நிகழ்ச்சி**

26.10.2021 அன்று திருவள்ளுவர் தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பில் அயல்நாட்டுத் தமிழறிஞர் முனைவர் தாழை. உதயநேசன் அவர்களோடு கற்றல் கற்பித்தல் என்னும் தலைப்பில் முற்பகல் 11 மணி அளவில் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் திரு. த. சிவகுமார் வரவேற்புரையும் சிறப்பு விருந்தினர் அறிமுகத்தைக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கே.சி. லலிதாம்பிகையும் நன்றியுரையை தமிழ் இலக்கியத் துறை மாணவி செல்வி ஜோஸ்பின் அபிசியா வழங்கினர். இந்நிகழ்வை முனைவர் ஜோ. சம்பத்குமார் ஒருங்கிணைத்தார்.



Thiruthangal Nadar College
Knowledge is Power

# திருத்தங்கல் நாடார் கல்லூரி

சேலவாயல், சென்னை – 51

## மாணவர் பங்களிப்பு

இரண்டாம் ஆண்டு மாணவி கவிதை போட்டியில் வெற்றி பெற்றமை மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூறாவது நினைவு நாளை முன்னிட்டு பாரதிய ஜனதா கட்சி நடத்திய கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் (10. 9. 2021) தமிழ்த்துறை மாணவி டி. கீர்த்தனா கலந்து கொண்டு மாவட்ட அளவில் (சென்னை) மூன்றாம் பரிசையும் மாநில அளவில் பாராட்டு சான்றிதழையும் பெற்றார்.




*********************************************